# இறந்த வைப்புதாரரின் கால வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி

DBOD.No.Dir.BC.64/13.03.00/2000-2001 ஜனவரி 03, 2001

பிராந்தியக் கிராம / உள்ளூர் வங்கிகள் உட்பட
அனைத்து வணிக வங்கிகளுக்கும்

அன்புடையீர்,

**இறந்த வைப்புதாரரின் கால**
**வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி**

2000 நவம்பர் 4 தேதியிட்ட எங்கள் ஆணைகள் 46 மற்றும் 48/13.03.00/2000-01 முறையே பாரா 14 மற்றும் 9 ஐப் பார்க்கவும். இறந்த வைப்பு தாரகளின் வைப்புகள் மீது வழங்கப்படும் வட்டி சம்பந்தமாக் அவைகளில் சொல்லியிருந்தோம். வைப்பின் முதிர்வு தேதிக்கு முன்னர் வைப்புதாரர் இறந்திருந்தால், அந்த வைப்பு கொடுக்கப்படும் தேதி வரை தற்சமயம் வட்டி வழங்கப்படுகிறது. வைப்பு முதிர்வு தேதிக்கு பின்னர் வைப்புதாரர் இறந்திருந்தால், அவர் உரிய தேதியில் வைப்பைப் புதுப்பிக்கத் தவறியதாகக் கருதி, முதிர்வுத் தேதிவரை தான் வட்டி வழங்கப்படும்.

2. முதிர்வு தேதிக்கு முன்னர் வைப்புதாரர் இறந்திருந்தாலும் வைப்பு கொடுக்கப்பட்ட தேதி வரை அப்பணத்தை வங்கி உபயோகப்படுத்தியிருப்பதால், முதிர்வு தேதியிலிருந்து கொடுக்கப்பட்ட தேதி வரை ஏதேனும் வட்டி வழங்க்கோரி விண்ணப்பங்கள் வருகின்றன. இதை மறுபரிசீலனை செய்ததில், சேமிப்புக் கணக்குக்கு வழங்கப்படும் வட்டி இத்தகைய நிகழ்வுகளில் வழங்கப்படலாம்.

3. 2001 ஜன்வரி 3 தேதியிட்ட எங்கள் ஆனை DBOD.No.Dir.BC.62 to 63/13.03.00/2000-2001 மாற்றி அமைக்கப்படுகிறது.

4. அறிவுரைகளின் தொகுப்பு நூல் பகுதி I, பாகம் I மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

நம்பிக்கையுள்ள

P.V. சுப்பாராவ்

தலைமைப் பொது மேலாளர்